27th March 1969]

மதுரை பேருந்து நிலையத்தில் "கேரோ"

திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு, (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஜனவரியில் மதுரையில் வாடகைக் கார்களை குறுக்கே நிறுததி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகளை வெளியே வர முடியாமல் கேரோ செய்தனரா ?

(இ) ஆமெனில், இதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) 1968-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ம் தேதி அன்று மதுரை பேருந்து நிலையத்தில் ஒரு சில வாடகைக் கார்கள் மூலம் சிறிது நேரத்துக்குப் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. காவல்துறை அதிகாரிகள் தலையிட்டதனுல், விரைவிலேயே அப்போக்குவரத்து நெருக்கடி நீங்கிவிட்டது. இதை "கேரோ" என்று கூற வேண்டியதில்லை.

(இ) போக்குவரத்துக் காவலர் ஒருவருக்கும் வாடகைக் காரோட்டி ஒருவருக்குமிடையில் வாக்குவாதம் முற்றியதன் காரணமாக, பிற வாடகைக் காரோட்டிகள் தங்களது வண்டிகளைச் சிறிது நேரத்திற்குப் பேருந்து நிலைய நுழைவாயிலில் நிறுத்தி வைத்தனர்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : இதேபோன்ற சம்பவம் சென்னையிலும் கடந்த இரண்டு வாரத்திற்கு முன்பு ஏற்பட்டதா? போக்குவரத்து சரிப்படுத்தக் கூடிய அதிகாரிகளை, வாடகைக் கார் ஓட்டுபவர்கள் அடிக்கடி தொந்தரவு செய்வதைப் பற்றி அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மூலக் கேள்வியில் குறிப்பிட்ட சம்பவம் மதுரையில் நடைபெற்றது. அதில் வாடகைக் கார் ஓட்டி ஒருவர், வாடகைக் காரை நிறுத்துவதற்கு இல்லாத இடத்தில் நிறுத்தினர் என்பதால காவலிலிருந்த கான்ஸ்டேபிள் அவரை வெளியே போகச் சொல்ல, அவர் மறுக்க, காரோட்டியை காரிலிருந்து வெளியே இழுக்க, நெருக்கடி ஏற்பட்டது. அதைப் போன்ற நெருக்கடி இரண்டு வாரத்திற்கு முன்னுல் சென்னையில் ஏற்பட்டது என்ற தகவல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லத்தான் எனக்குத் தெரிகிறது.

State Transport Buses.

*258 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any bus plied sans registration number during the Indian International Trade and Industries Fair held at Madras, and

(b) the number of State Transport buses which were allowed to ply in the City sans the State Emblem ?

தமிழ் நாடு அரசு பேருந்துகள்

***திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை உலகக் கண்காட்சியில் ரிஜிஸ்ட்ரேஷன் நம்பரின்றி பஸ் ஓட்டப்பட்டதா ?

(இ) அரசாங்க சின்னமின்றி எத்தனை பேருந்துகள் நகரில் ஓட்டப்பட்டன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) சிறப்பான வகையில் தயாரிக்கப்பட்ட மூன்று பேருந்துகள் பின்னர் பதிவு செய்யப்படும் என்று எதிர்பார்த்து பொருட்காட்சியைச் சுற்றிப் பார்க்கும் பேருந்துகளாக ஓட்டப் பட்டன. அந்தப் பேருந்துகள் 5—3—68 அன்று பதிவு செய்யப்பட்டன.

(இ) 1967 ஜூன் முதல் செப்டம்பர் வரையில் அரசுச் சின்னமின்றி ஐம்பத்தி இரண்டு பேருந்துகள் ஓட்டப்பட்டன. பேருந்துகளின் பக்கத்தில் சின்னத்தை பொறிப்பதற்கு தேவையான ஒட்டுப்படத்தாள் அப்போது இல்லாத காரணத்தால் பேருந்துகள் அரசுச் சின்னமின்றி ஓட்டப்பட்டன.

Housing Board Quarters

* 259 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the names of the Members of Legislature to whom the houses of the Housing Board were let for rent from 1st March 1967 to 30th September 1967 ?

வீட்டுவசதி வாரிய வீடுகள்.

திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினு விற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

1967-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1967-ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை சட்டமன்ற அங்கத்தினர்கள் யார் யாருக்கு வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள் வாடகைக்கு விடப்பட்டிருக் கின்றன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை. ஆனுல், திரு. சோம சுந்தரம் என்ற எம்.எல்.ஏ.க்கு 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18-ம் தேதி முதல் 1968-ம் வருடம் டிசம்பர் மாதம் 19-ம் தேதி வரைக்கும் வீடு கொடுக்கப்பட்டு 1968-ம் வருடம் டிசம்பர் மாதம் 19-ம் தேதி காலி செய்யப்பட்டது. திரு. அறிவழகன் எம்.எல்.சி.க்கு 1967-ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் வருடம் மே மாதம் 9-ம் தேதி வரை யில் வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு வீட்டைக் காலி செய்தார். திரு. கொளத்தூர் கோதண்டம் என்பவருக்கு 1968-ம் வருடம் மே மாதம் 1-ம் தேதியில் கொடுக்கப்பட்டு இருந்து வருகிறுர். திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களுக்கு 1968-ம் வருடம் ஜனவரி மாதம் 24-ம் தேதி முதல் கொடுக்கப்பட்டு இருந்து வருகிறுர்.

திரு. சி. பி. சிற்றரசு : சென்னையில் வீடு இருக்கிற அங்கத்தினர்களுக்கு விடுதிகளில் இடம் கொடுப்பதுண்டா ? அப்படிக் கொடுத்திருந்தால் யார் யாருக்கு கொடுத்திருக்கிறுர்கள் என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : எம்.எல்.ஏ.க்களுக்குத் தான் இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தவிர மற்றவர்களுக்குக் கொடுக்கப் படவில்லை. ஆனுல் பப்ளிக் கோட்டாவில் பொது மக்களுக்கு கொடுக்கப் படுகிற வீடுகளில் அவர்களுக்கு எல்லாவிதமான உரிமையும் கொடுப்பதற்கு உண்டு.

திரு. ஆர். கிருஷ்ணசுவாமி நாயுடு : வீட்டு வசதி வாரியத்தினுல் கொடுக்கப்படும் இந்த வீடுகளுக்கு வாடகை எவ்வளவு நிர்ணயிக்கப்படுகிறது? யாரால் நிர்ணயிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : சேர்மன், ஸ்டேட் ஹவுசிங் போர்டு.